மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர், அம்மாபாளையம் பால் குளிரூட்டும் நிலையமானது நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் லிட்டர் பாலினைக் கையாளும் திறன் கொண்டதாகும். ஆகையால் இதை நவீனப்படுத்த ஒரு கோடியே 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் பணியில் புதிய எடைமேடை, புதிய மின்னணு கணினி எடைபோடும் இயந்திரம், தரைத்தளங்கள் செப்பனிடும் பணிகள் மற்றும் கான்கிரீட் நடைபாதை அமைத்தல், புதிய* G.I. Sheet *கூரை அமைத்தல், புதிய* Condenser unit *நிறுவுதல் போன்ற பணிகள் அடங்கும். மேலும், ஆரியம்பாளையம் மற்றும் வெள்ளாளப்பட்டி ஆகிய இடங்களில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுகொண்ட மேலும் இரண்டு தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவும் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் பால் உற்பத்தியாளர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

246—

பண்ணைக் குட்டைகள்

*3525 **திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 24]

பண்ணைக் குட்டைகள் அமைக்க 100% மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: *விசுவாசத்திற்கு விலாசமும், உண்மைத் தொண்டர்களுக்கு உயர்வும் வழங்கும் இயக்கத்தினுடைய ஆராதனைக்குரிய தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் ஏந்தலே! ஓராயிரம் ஆண்டு தமிழர் செய்த மா தவத்தால், வாராது வந்த மாமணியே! உங்கள் காலடி மலர்களுக்கு விசுவாச மலர் தூவி வணங்குகிறேன், உம்மையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்மைப் புரட்சியிலும், பசுமைப் புரட்சியிலும் உண்மைப் புரட்சியை உருவாக்கி, இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் என்ற தாரக மந்திரத்தோடு, இரண்டாம் பசுமைப் புரட்சியை தமிழக வேளாண்மைத் துறையில் உருவாக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், தமிழகத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 சதவிகிதம் மானியத்தில் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் திட்டம் மக்களுடைய மகத்தான ஆதரவோடு, மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் 9 மாவட்டங்களிலும், 2013–2014 ஆம் ஆண்டில் 8 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. மேலும், நடப்பு 2014–2015 ஆம் ஆண்டிலும் 100 சதவிகித மானியத்தில் பண்ணைக் குட்டைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி நிதி உதவியுடன் நீர் வள, நில வள*

திட்டத்தின்கீழ் தமிழகத்தில் வேளாண் பொறியியல் துறையால் செயல்படுத்தப்பட்டு வந்த பண்ணைக் குட்டைகள் அமைக்கும் திட்டம் முடிவடைந்துவிட்டதாகத் தெரிகிறது. தமிழக அரசு இத்திட்டத்தைத் தொடர நிதி ஒதுக்கி, மீண்டும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பண்ணைக் குட்டைகள் அமைப்பதன்மூலம் மழை நீரினைச் சேமித்து, பயிர்களின் முக்கிய வளர்ச்சிப் பருவங்களில், நீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் பாசனம் மேற்கொண்டு, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற முடியும் என்பதை அறிந்து மழை நீர் சேகரிப்புத் திட்டம் தந்த மகாமக மகத்துவம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவி ஏற்றது முதல் 100 சதவிகித மானியத்தில் பண்ணைக் குட்டைகள் அமைக்க வழிவகை செய்து, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வருகிறார்கள்.*

கடந்த 2011–2012 ஆம் நிதியாண்டில் ரூ.475.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 100 சதவிகித மானியத்தில் 649 பண்ணைக் குட்டைகளும், 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.55.85 இலட்சம் மதிப்பீட்டில் 70 பண்ணைக் குட்டைகளும், 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.12.37 இலட்சத்தில் 16 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டன. மேலும், ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், நீர் வள, நில வளத் திட்டம், நதி பள்ளத்தாக்குத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் இதர விவசாயிகளுக்கு 10 சதவிகித பங்களிப்போடும், ஆதி திராவிட விவசாயிகளுக்கு 5 சதவிகித பங்களிப்போடும் ரூ.30,000 முதல் ரூ.50,000 வரையிலான செலவிலும் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2013–2014 ஆம் ஆண்டில் 9,777 பண்ணைக் குட்டைகள் ரூ.39.10 கோடி நிதி செலவினத்தில் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.21.03 கோடியில் 4,731 பண்ணைக் குட்டைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பண்ணைக்

குட்டைகள் விவசாயிகள் மற்றும் பயனாளிகள் குழுமூலமாக அமைக்கப்படுகின்றன. மேலும், மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்கீழ் 2011 ஆம் ஆண்டு முதல் கடந்த 3 ஆண்டுகளில் ரூ.3.23 கோடி ஒதுக்கீட்டில் 552 பண்ணைக் குட்டைகளும், நீர் வள, நில வள திட்டத்தின்கீழ் ரூ.5.24 கோடி நிதி ஒதுக்கீட்டில் 968 பண்ணைக் குட்டைகளும், நதிநீர் பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ் 28 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீராதாரம் குறைந்துகொண்டு செல்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, அதைப் பெருக்கவேண்டும் என்பதற்காகத்தான் ஒவ்வொரு வட்டாரத்திலும், குறிப்பாக ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தபட்சம் 10 பண்ணைக் குட்டைகள் இருக்கவேண்டும் என்று இந்த அரசு எடுத்த முயற்சியின் காரணமாக, பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணியிலே* NREGA *திட்டத்தின்கீழ் பணியாளர்களை அனுப்பி, விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில் நீராதாரத்தைப் பெருக்குகின்ற வகையில் பண்ணைக் குட்டைகளை அமைப்பதற்கான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தியது. ஆனால், அதிலே பலவிதமான சிக்கல்கள் இருப்பதாகத் தெரிகிறது. அதற்காக வேளாண்மைத் துறை மற்றும் பொறியியல் துறை அலுவலகங்களில் விண்ணப்பங்களை வாங்குகிறார்கள். எனவே,* NREGA *திட்டத்தின் வாயிலாக அமைக்கப்படுகின்ற பண்ணைக் குட்டைகள் 10 சதவிகிதம் மட்டுமே இதுவரை முடிவு அடைந்திருப்பதாகத் தெரிகிறது. உதாரணத்திற்கு, 52 பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய ஒரு வட்டாரத்திற்கு 520 பண்ணைக் குட்டைகள் அமைக்கவேண்டும் என்று சொன்னால், 50, 40, 60 என்ற அளவிலேயே அந்தப் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நீராதாரம் குறைந்துகொண்டே செல்கின்றது.*

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: பண்ணைக் குட்டைகள் சம்பந்தமாகத்தான் நான் கேட்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பண்ணைக் குட்டைகள் சம்பந்தமாகத்தான் கேட்கிறீர்கள். அதையும் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: அதேசமயத்தில், வேளாண் பொறியியல் துறையால் 20 மீட்டர் அகலமும், 25 மீட்டர் நீளமும் கொண்ட பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கு 40 ஆயிரம் ரூபாய் அல்லது 60 ஆயிரம் ரூபாய் போதுமானதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். விவாதம் செய்து கொண்டிருக்காதீர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: N.R.E.G.A. வழியாக அமைக்கப் படுகின்ற 20 மீட்டர் அகலமும், 25 மீட்டர் நீளமும் கொண்ட பண்ணைக் குட்டைகளுக்கு அதிகபட்சமாக ஒன்றரை இலட்சம் ரூபாய் வரையிலும் செலவிடப்படுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் வெங்கடேசன், கேள்வி கேளுங்கள் என்று சொன்னால், நீங்கள் விவாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாக, தமிழக அரசினுடைய நோக்கம் முழுவதுமாக நிறைவேறுகின்றவகையிலே, பல்லாயிரக்கணக்கான பண்ணைக் குட்டைகளை அமைப்பதற்கு மனித சக்தியை விட்டு, இயந்திரத்தின்மூலம் பண்ணைக் குட்டைகள் அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியின் காரணமாக விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டதை அறிந்து, கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

2014 ஜூலை 24]

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளின் துயர் துடைக்கும் நோக்கிலும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திடவும், விவசாயிகள் மழை நீரைச் சேகரித்து, அதனைப் பயிரின் முக்கிய காலகட்டங்களில் பயன்படுத்தி, பாசனம் செய்து, பயிர் இழப்பைத் தவிர்த்திட பண்ணைக் குட்டைகள் அமைக்க ஆணையிட்டார்கள். இதன்படி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களில், மாவட்டத்திற்கு தலா 5 ஆயிரம் பண்ணைக் குட்டைகள்வீதம், 15 ஆயிரம் பண்ணைக் குட்டைகளும், மற்ற டெல்டா மாவட்டங்களான கடலூர், கரூர், புதுக்கோட்டை, திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் 6,500 பண்ணைக் குட்டைகளும், இதர மாவட்டங்களில், ஆங்காங்கே நிலவும் சூழ்நிலைக்கேற்ப மொத்தம் 50 ஆயிரம் பண்ணைக் குட்டைகளும் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி தந்தார்கள்.

பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின்மூலம் மேற்கொள்ளவும், இத்திட்டத்தின்கீழ் ஓர் ஆண்டிற்கு 100 நாள் என்ற உச்ச வேலைவாய்ப்பு நாட்களை, 150 நாட்கள் என உயர்த்தியும் அனுமதி வழங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 3 இலட்சத்து 34 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வில் வெளிச்ச ரேகைகளை உருவாக்கித் தந்தார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்திட்டத்தின்கீழ் பயனடைய ஆர்வமுள்ள சிறு, குறு மற்றும் ஆதி திராவிட, பழங்குடியின விவசாயிகளை வேளாண் துறை களப் பணியாளர்கள் அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து விருப்ப விண்ணப்பக் கடிதம் பெற்று, அதனை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவரிடம் அளித்தனர். இவ்வாறு விருப்பம் தெரிவித்த விவசாயிகளின் பட்டியல் கிராம சபைக் கூட்டங்களிலும், சிறப்புக் கூட்டங்களிலும் சமர்ப்பித்து, கிராம சபை ஒப்புதல் பெறப்பட்டது. இவ்வாறு ஒப்புதல் பெறப்பட்ட பட்டியல் மாவட்ட ஆட்சியரின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டபின், பண்ணைக் குட்டை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. இதுவரை டெல்டா மாவட்டங்களில் அனுமதிக்கப்பட்ட 21,600 பண்ணைக் குட்டைகளில், 22,835

பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக 19,605 பண்ணைக் குட்டைகளுக்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் அனுமதிக்கப்பட்ட 50 ஆயிரம் பண்ணைக் குட்டைகளில் இதுவரை 46,010 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக 23 ஆயிரத்து 663 பண்ணைக் குட்டைகளுக்கு நிருவாக அனுமதி அளித்துள்ள நிலையில், 14,462 பண்ணைக் குட்டைகள் பணி துவங்கப்பட்டு, அவற்றில் 8,764 பணிகள் நிறைவு பெற்றுள்ளன என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

247—

பாதாள சாக்கடைத் திட்டம்

***7700—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, புலியூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10—50

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, புலியூர் பேரூராட்சியில் 2013—2014 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ரூ.1 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில்